1994 நவம்பர் 10] [திரு. சு. முத்துசாமி]

அரசு அதைத் தொடர் நடவடிக்கையாக எடுத்து சுத்தமாக அந்தப் பகுதியிலே அந்த நோய் வராமல் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, பன்றிகளை அங்கேயிருந்து அகற்ற வேண்டும்; அப்படி அகற்றவில்லை என்றால் அவைகள் சுடப்படும் என்று அவர்களுக்கு ஒரு கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கின்ற காரணத்தால் அவர்களுக்கு மற்ற தொழில் செய்வதற்கான ஏற்பாடும்கூட செய்து கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி அரசினுடைய சார்பாகவும் அறிவிக்கப்பட்டது. அதிலே பெரும்பகுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த நடவடிக்கைகளின் மூலமாக அது முழுமையாக அங்கே கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதேபோல, மருத்துவர்கள், மருந்துகள், தேவையான அத்தனையும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. எனவே, கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு மிக மிக, மிகக் குறைந்து இருக்கிறது என்பதையும், அடுத்த ஆண்டிலேயிருந்து நிச்சயமாக, முழுமையாக இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்திவிட முடியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்தெந்தப் பகுதிகளிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற பட்டியலை வரிசையாகச் சொன்னால் அதற்குக் காலம் போதாது என்ற காரணத்தால், இந்த விளக்கமே போதும் என்று நான் கருதுகிறேன். எனவே, கடந்த காலங்களிலே இருந்ததைவிட மிக அதிக அளவிலே அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு அவைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பயிற்சியைத் தொடர முடியாததும், தேர்வு எழுத முடியாததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பயிற்சியைத் தொடர முடியாமலும், தேர்வு எழுத முடியாமலும் உள்ள நிலை குறித்து, திரு. ஞானசேகரன் ஒரு அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார். இது ஏற்கெனவே பலமுறை அவையில் பேசப்பட்ட பிரச்சினைதான். இருந்தாலும், இதில் புதிய பிரச்சினை ஏதாவது இருந்தால் அதை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமரலாம்.

[1994 நவம்பர் 10

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஆசிரியர் பயிற்சி படித்துவிட்ட மாணவர்கள் இன்று பலபேர் தேர்வு எழுத முடியாமல் இருக்கிறார்கள். புதிய பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று பேரவைத் தலைவர் இங்கே நீங்கள் கட்டளை இட்டிருக்கிறீர்கள். புதிய பிரச்சினை என்னவென்று சொன்னால், முன்பு இது எழுப்பப்பட்டபோது, வழக்குகள் உச்ச நீதிமன்றத்திலே இருந்தன. உச்ச நீதிமன்றத்திலே அனுமதியைப் பெற்று இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஓராண்டு, ஈராண்டு படித்து முடித்தவர்கள், புத்தொளி பயிற்சியைப் படித்து முடித்தவர்கள் தேர்வு எழுத இயலாமல் இருக்கக்கூடிய நிலையை நான் எழுப்பியபோது, உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது; நாங்கள் உத்தரவைப் பெற்று அவர்களை அனுமதிக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இப்போது நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்று நீதிமன்றமே ஆணையிட்டு, 102 பள்ளிகளைத் திறப்பதற்கான அரசு ஆணையை இந்த அரசு வழங்கி இருக்கிறது. உயர்நீதிமன்றத்திலே அனுமதி பெற்றுத்தான், அவர்கள் அந்த அரசு ஆணையைப் பெற்று பள்ளியை நடத்தினார்கள். இப்படி பள்ளியை நடத்தியவர்கள் கிட்டத்தட்ட 40 ஆயிரம் பேர்கள் என்று சொல்கிறார்கள். கணக்குப் போட்டுப் பார்த்தால் 15,200 தான் வருகிறது என்று கூறுகிறார்கள். ஏற்கெனவே நட்டாற்றில் விடப்பட்டு இருக்கிற அந்த மாணவர்களுக்கு மட்டும்—இனிமேல் நீங்கள் டீச்சர் டிரெயினிங் ஸ்கூலையே திறக்க வேண்டாம். யாருக்கும் அங்கீகாரம் கொடுக்க வேண்டாம்—. பாதிக்கப்பட்டு இருக்கிற மாணவர்களைப் பொறுத்த மட்டில், பி.எட்., எம்.எட்., போன்ற பயிற்சிகளையே இன்று கரஸ்பான்டன்ஸ் கோர்ஸிலே படிப்பதற்கு அனுமதித்து இருக்கிற அரசு, இந்த ஆசிரியர் பயிற்சியில் ஏற்கெனவே புத்தொளி பயிற்சியை முடித்தவர்கள், தேர்வு எழுதுவதற்காகப் பணம் கட்டியவர்களை மட்டும் நீங்கள் அனுமதிக்க வேண்டும். இனிமேல் யாருமே டீச்சர் டிரெயினிங் ஸ்கூலை திறக்கக் கூடாது என்ற உத்தரவாதத்தை நீங்கள் பெற்றுக்கொண்டு இவர்களை மட்டும் நீங்கள் ஒரு கரஸ்பாண்டென்ஸ் கோர்ஸாக, புத்தொளி—அதாவது ஒரே மாதத்தில் கொடுக்கக்கூடிய பயிற்சி போதாது என்று நீதிமன்றம் இன்று தலையிட்டது. அந்த ஒரு மாதப் பயிற்சிக்குப் பதிலாக நீங்கள் ஆறு மாத காலப் பயிற்சியை கரஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் மூலமாகவாவது ஆரம்பித்து, பாதிக்கப்பட்டிருக்கிற மாணவர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு, அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றுகிற வகையில் நம்முடைய மாண்புமிகு

1994 நவம்பர் 10] [திரு. சி. ஞானசேகரன்]

அமைச்சரவர்கள், நீங்கள் எப்படியாவது நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு மட்டும் அனுமதி அளித்துவிட வேண்டும் என்கிற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக ஒரு கரஸ்பாண்டென்ஸ் கோர்ஸையாவது நீங்கள் ஆரம்பியுங்கள். ஆரம்பித்து, இவர்களை மட்டும் கரையேற்றி விட்டுக்கூட நீங்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மூடி விடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுவேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்று நட்டாற்றில் விடப்பட்டிருக்கிற, தத்தளித்துக் கொண்டு இருக்கிற, இனி எதிர்காலமே இல்லை என்று தவித்துக் கொண்டிருக்கிற அந்த மாணவர்களுடைய பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டு, நீங்கள்–அமைச்சரவர்கள் உடனடியாக அவர்களுக்கு ஒரு தீர்வு காண விழைவாரா? இந்த ஆண்டு அவர்களைத் தேர்வு எழுத அனுமதிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வியமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உச்ச நீதிமன்ற ஆணை காரணமாகத் தேர்வு எழுத இயலாத நிலையிலே இருக்கிற மாணவ, மாணவியரின் மொத்த எண்ணிக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல 15 ஆயிரம் அல்ல; 13 ஆயிரத்து 88.

இந்த மாணவ, மாணவியர் தேர்வு எழுத இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்கான காரணத்தை மாண்புமிகு உறுப்பினரவர்களே இங்கே தெரிவித்தார்கள். அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் கூட, நீதிமன்றம் அதற்குத் தடை விதித்த காரணத்தால் மாணவர்கள், மாணவிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆக, நட்டாற்றிலே விட்டார்கள் என்று சொல்லும்போது, அதற்குக் காரணம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புதான் ; அரசின் நடவடிக்கை அல்ல என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது அந்த மாணவ, மாணவியர் தேர்வு எழுதுவதற்கான வாய்ப்புகளை, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த நேரத்தில், மத்திய அரசு 'என்.சி.டி.இ., என்ற நேஷனல் கவுன்சில் ஃபார் டீச்சர் எஜுகேஷன்

என்ற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறது. அதனுடைய தலைவரை அண்மையில் கல்வித் துறையின் செயலர் அவர்கள் சந்தித்து, இந்த மாணவ மாணவியர் தேர்வு எழுதுவது குறித்து விவாதித்து, இதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டுமென்று தெரிவித்தபொழுது, 'இதுகுறித்துக் கடிதம் எழுதுங்கள், ஆவன செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்', என்ற வாய்மொழிச் செய்தியைத் தெரிவித்ததாக என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இது தொடர்பாகக் கல்வித் துறைச் செயலர் அவர்கள் என்.சி.டி.இ., தலைவருக்குக் கடிதம் எழுத இருக்கிறார்கள். அங்கிருந்து கிடைக்கின்ற பதிலின் அடிப்படையிலே உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

இப்பொழுது தேர்வு எழுத இயலாமல் இருக்கின்ற மாணவ மாணவியருக்கு இந்த ஆண்டிலே தேர்வு நடத்த உடனடியாக இயலாவிட்டாலும், மிக விரைவில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதுவும் கொடுக்கவில்லையே. (குறுக்கீடு) கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தால் 55-ல் முறைப்படி வரும். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு கொடுத்தது பிறகு வரும். (குறுக்கீடு) அது இன்றைக்கே வர வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) தொகுதி சம்பந்தப்பட்டது, எடுத்திருக்கிறேன். 55-இலே கொடுத்தது, (குறுக்கீடு) பதில் வந்தவுடன் வைக்கப்படும். இன்றைக்குப் பதில் வந்திருக்கிற பிரச்சினைகள் அவையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து பதில் வருகிறபொழுது உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். (குறுக்கீடு) அந்தப் பிரச்சினை குறித்து பதில் வந்தவுடன் வைக்கிறேன். (குறுக்கீடு) கூட்டுறவு நூற்பாலை பற்றி இங்கே மற்றவர்கள் பேசி, அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அறந்தாங்கியா ? உட்காருங்கள்.